ப. சிதம்பரம் பேச்சு...

13–ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒத்தி வைத்தார்கள். இப்போது 2026க்கு பிறகு கணக்கெடுத்து, தொகுதிசீரமைப்புச் செய்வார்கள்.

அரசியல் சாசனத்தின் 81வது பிரிவு, 82வது பிரிவில் என்ன சொல்கிறது என்றால், மக்கள் தொகை அடிப்படை யில் தான் தொகுதியை பிரிக்க வேண்டும். இரண்டு கோடி பேருக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்றால், நான்கு கோடி பேருக்கு இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று ஒரு கணக்கு. இருபது லட்சம் பேருக்கு ஒரு நாடாளு மன்ற உறுப்பினர் என்றால், ஒரு கோடி பேருக்கு 5 நாடாளுமன்ற உறுப்பி னர்கள். இன்றைக்கு 543 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இந்தியாவின் மக்கள்தொகை இன்றைக்கு 2025 இல் ஏறத்தாழ 145 கோடி. 145 கோடிக்கு 543 பேர் என்றால், உத்தேசமாக மனக்கணக்காக சொல்கிறேன், 20 இலட்சம் பேருக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்.

1971 கணக்கெடுப்பின்படிதான் இன்றைக்கு பிரித்திருக்கிறார்கள். நமக்கும், பாண்டிச்சேரிக்கும் கணக்கு சுலபமாக சொல்வதற்காக இரண்டையும் சேர்த்துக் கொள்ளுங்கள், 40 இடங்கள்; உத்தரப் பிரதேசத்திற்கு 80 இடங்கள்; ஒன்றிணைந்த பீகாருக்கு 50 இடங்கள். இப்போது பீகாரைப் பிரித்த பிறகு, பீகாருக்கு 40 இடங்கள். மகாராஷ்டிரா விற்கு 48 இடங்கள் என்று பிரித்திருக்கி றார்கள். இது 1971 மக்கள் கணக்கெடுப்பு பிரித்து, தேர்தல் கமிஷன் அறிவித்திருக்கிறது. அதில் ஒன்றும் சங்கடமில்லை.

அமித்ஷா சொல்வது என்ன?

புதிய மக்கள் தொகை கணக்கெடுப்புப் படி தொகுதி சீரமைப்பு செய்தால் என்ன ஆகும் என்பதை நீங்கள் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும். உத்தரப் பிரதேசத்தின் இன்றைய மக்கள் தொகை 2023 கணக்குப்படி 23 கோடியே 57 லட்சம். தமிழ்நாடு புதுச்சேரியின் மக்கள் தொகை 7 கோடியே 69 லட்சம். நமக்கு 40 இடங்கள் என்றால், அந்த கணக்கெடுப்புப்படி அவர்களுக்கு 120 இடங்கள். இப்போதே நம்முடைய குரல் கேட்பது கிடையாது. 120 பேர் உத்தரப் பிரதேசத்தில் இருந்து வந்துவிட்டால், நம்முடைய குரல் அமுங்குமா? அமுங்காதா?

543 உச்சவரம்பு என்றால், அதற்குள் எவ்வாறு அடக்க முடியும்? அவர்களுக்கு 40 இடங்களுக்கு அதிகம் கொடுத்தால், 543 இடங்களுக்குள் அடக்க முடியாதல்லவா...? அதற்காகத்தான் தீர்க்க தரிசனத்தோடு நரேந்திர மோடி 848 பேருக்கு கட்டடத்தை கட்டிவிட்டார். எனவே, 848 பேரில் அவர்களுக்கு 120, நமக்கு அதே 40 என வைத்துக் கொள்ளுங்கள், அதைத்தான் அமித்ஷா சொல்கிறார். அமித்ஷா சொல்கிறார், தமிழர்கள் எல்லாம் முட்டாள்கள். நான் சொல்வதை நம்புவார்கள் என்று நினைக்கிறார். உங்கள் எண்ணிக்கை குறையாது என்று சொல்கிறாரே தவிர, உத்தரப் பிரதேச எண்ணிக்கை கூடாது என்று சொன்னாரா? சொல்ல வில்லையே...? நமக்கு அதே 40. மக்கள் கணக்கெடுப்புப்படி மறுசீரமைப்பு செய்தால், உத்தரப் பிரதேசத்திற்கு 120 ஆகிவிடும்.

மிகப்பெரும் பேராபத்து!

பீகார் மக்கள் தொகை 12 கோடி 68 லட்சம். பீகார் கணக்கெடுப்புப்படி, இதே 40 நமக்கு என்றால், பீகாருக்கு இப்போது 40 இருப்பது, 65 ஆகிவிடும். மகாராஷ்டிரா 12 கோடியே 64 லட்சம். நமக்கு 40 என்றால், மகாராஷ்டிராவிற்கு இன்றைக்கு 48, அவர்களும் 65க்கு சென்று விடுவார்கள். நீங்கள் 543 சபையிலேயே 40 குரல் ஓரளவிற்குதான் கேட்கிறது. தமிழ்ச்சி பேசினார்கள் என்றால், கனீர் என்று கேட்கிறது. 848 பேரில் 40 பேர் எந்த அளவிற்கு கேட்கும். எத்தனை நிமிடம் பேச விடுவார்கள்? ஒரு கட்சிக்கு என்ன நேரம் கிடைக்கும்?

இப்போது காங்கிரஸ் கட்சிக்கு ஐந்து, ஆறு மணி நேரம் விவாதம் என்றால், ஒரு மணி நேரம் கிடைக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 30 நிமிடம் கிடைக்கிறது. 848 பேருக்கு 5, 6 மணி நேரத்தை பகிர்ந்து தர வேண்டும் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 15 நிமிடம்தான் கிடைக்கும். இதெல்லாம் மிகப்பெரும் பேராபத்து.

இதில் இன்னொரு பேராபத்து இருக்கிறது. ஒரு கட்சி, வடநாட்டில் - உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசத்தில் வெற்றி பெற்றாலே ஆட்சி அமைத்துவிடும். தமிழ்நாட்டில் தேர்தலுக்கே வர வேண்டாம். தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சி போட்டியிடாவிட்டால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், தமிழ்நாட்டில்தேர்தலுக்குள் நுழையாமலேயே தமிழ்நாட்டில் தேர்தல் களத்திற்குள் நுழையாமலேயே ஆட்சி அமைத்துவிடலாம். அவ்வாறு ஆட்சி அமைத்து விட்டார்கள் என்றால், தமிழ்நாட்டின் குரல் யார் கேட்பார்கள்? உன் ஆதரவும் வேண்டாம்; உன் ஓட்டும் வேண்டாம்; அதைத்தானே செய்வார்கள்.

அமெரிக்காவின் ஆணவத்திமிர்!

இன்றைக்கு தொலைக்காட்சியில் ஓடிக் கொண்டிருக்கிறது. உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை எந்த அளவிற்கு அமெரிக்க ஜனாதிபதியும், துணை ஜனாதிபதியும் அவமதித்தார்கள் என்பதை பாருங்கள். தயவு செய்து பாருங்கள். சி.என்.என்., பி.பி.சி.யில் நாள் முழுவதும் ஓடிக் கொண்டிருக்கிறது. ஒரு நாட்டின் ஜனாதிபதியை வைத்துக்கொண்டு, அவரை அவமதித்து, வெள்ளை மாளிகையை விட்டு வெளியே செல் என்று சொல்லும் அளவிற்கு இன்று அமெரிக்க ஆணவத் திமிர் இருக்கிறது.

தமிழ்நாட்டுக்கு என்ன மரியாதை கிடைக்கும்?

இன்றைக்கு நம்முடைய தென்னாட்டு முதலமைச்சர்கள் - ஆந்திரா, தெலுங்கானா, கேரளா, தமிழ்நாடு சென்றார்கள் என்றால், பொன்னாடை கொடுக்கிறார்கள். ஏதோ மரியாதையாக உட்கார வைக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களுடைய வாக்கு வேண்டாம்; ஓட்டு வேண்டாம்; சீட்டு வேண்டாம் என்ற நிலைமை வந்தால். தென்னாட்டு முதலமைச்சர்களுக்கு என்ன மரியாதை கிடைக்கும்? வெள்ளை மாளிகையில் ஜெலன்ஸ்கிக்கு நடந்ததுதான் தென்னாட்டு முதலமைச்சர்களுக்கு நடக்கும். எனவே இந்தத் தொகுதி சீரமைப்பு என்பது, மிகப்பெரிய கத்தி நம்முடைய கழுத்தில் தொங்குகிறது. நமக்கு 40 என்றால், அவர்களுக்கு 80 இருந்தால் சரி. நமக்கு 40, அவர்களுக்கு 120 என்றால், அது சரியல்ல. இன்னும் சொல்லப்போனால், முழுமையாக மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி சீரமைப்பு செய்தால், நமக்கு 40க்கு குறையும்; அவர்களுக்கு 120 க்கு அதிகமாகும்.

காரணம் என்ன? நம்முடைய மக்கள் தொகை ஒரு நிலைக்கு வந்துவிட்டது. ஒரு பெண் எத்தனை குழந்தைகளைப் பெற்றுக் கொள்வார் என்பதை பொறுத்து தான் மக்கள் தொகை. ஒரு பெண் ஒரு தம்பதி, இரண்டு குழந்தை களைப் பெற்றுக் கொண்டால், அந்த மாநிலத்தின் அந்த நாட்டின் மக்கள் தொகை சமநிலைக்கு வந்துவிட்டது என்று அர்த்தம். இரண்டு பேர் தாய், தகப்பன் இரண்டு குழந்தைகள், அப்போது மக்கள் தொகை அதிகரிக்காது; மக்கள் தொகை குறையாது. இறப்பு விகிதம் அதிகரித்தால்தான் குறையும்; மக்கள் தொகை கூடாது.

அந்த நிலையைத்தான் இன்றைக்கு பல ஐரோப்பிய நாடுகள் எட்டிவிட்டன; சீனா எட்டிவிட்டது; பல நாடுகள் எட்டிவிட்டன; நம்முடைய நாடு எட்டுவதற்கு கொஞ்சம் நாள் ஆகும். இதில் தென்னாடு 5 மாநிலங்கள். அந்த ஐந்து மாநிலங்களின் குழந்தை பிறப்பு விகிதம் 1.7, 1.7, 1.8, 1.8, 1.8. பீகார் 3.0, உத்தரப் பிரதேசம் 2.35 அவர்கள் மக்களைத் தொகை அதிகரிக்கிறது. நான் அந்த மக்களை குறை சொல்லவில்லை. அவர்களுக்கு கல்வி அறிவு வளர்ந்து, போக்குவரத்து வளர்ந்து, மருத்து வத்துறை வளர்ந்தால் அவர்கள் விகிதமும் குறையும். நான் அதை குறையாக சொல்லவில்லை. ஆனால், அவர்களுடைய மக்கள் தொகை அதிகரிக்கிறது. நம்முடைய மக்கள் தொகை ஸ்ரதத் தன்மையை அடைந்துவிட்டது. எனவேதான், இந்தச் சோதனை வந்திருக்கிறது.

தென்மாநிலங்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும்!

இந்த சோதனையில் வெல்ல வேண்டுமென்றால், தென் மாநிலங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அதற்காகத் தான் முதலமைச்சர் தீர்க்க தரிசனத்தோடு அனைத்து முதலமைச்சர்களையும் அழைத்தார். அதில் தென்னாடு முதலமைச்சர்கள் இரண்டு பேர் வந்தார்கள். ஐந்து பேரும் வந்துவிடுவார்கள். ஏனென்றால், அவர்களைத்தான் பாதிக்கப்போகிறது.

இன்றைக்கு ஆந்திராவில் 42 இருந்தது. அதை இரண்டாகப் பிரித்த பிறகு, தெலுங்கானாவிற்கு 17 ஆந்திராவிற்கு 25 என்று பிரித்து விட்டார்கள். அந்த 17 இன்னும் குறைந்துவிட்டது என்றால், தெலுங்கானாவிற்கு என்ன முக்கியத்துவம் டெல்லியில் இருக்கும்; 25 இன்னும் குறைந்தது என்றால். ஆந்திராவிற்கு என்ன முக்கியத்துவம் டெல்லியில் இருக்கும்; கேரளாவிற்கு 20 தான். அது 16, 15 ஆகிவிடும். எனவே, மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இதை எவ்வாறு சமாளிப்பது என்பதை தென்னாட்டு முதலமைச்சர்கள் தென் மாநில முதலமைச்சர்கள் ஆலோசித்து - சாதுரியமாக இதை அணுக வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். அதற்கு முதலமைச்சர் தலைமை தாங்குவார் என்று நான் நம்புகிறேன்.

தமிழனாக நிமிர்ந்து நில்லுங்கள்!

இரண்டு கத்திகள் நம் கழுத்தில் தொங்குகிறது. கழுத்தின்மேல் தொங்குகிறது. ஒன்று, மும்மொழிக் கொள்கை என்ற துருப்பிடித்த ஆயுதம். எந்த மாநிலத்திலும் அமலாக்காத ஒரு கொள்கையை, நம் மீது திணிக்கிறார்கள். இன்னொன்று, தொகுதி மறுசீரமைப்பு என்று நம்முடைய முக்கியத்துவத்தை நம்முடைய பங்களிப்பைக் குறைக்க பார்க்கிறார்கள். இதில் கட்சி வேறுபாடு கிடையாது. யாராவது ஒன்று, இரண்டு தலைவர்கள் தனியாக குரல் கொடுத்து பரதேசியாக அடைந்தால் பரவாயில்லை, கட்சி வேறுபாடு கூடாது. அனைத்துக் கட்சிகளும் தமிழர்களுடைய கட்சி; அனைத்துக் கட்சிகளும் தமிழ் உணர்வு உள்ளவர்களுடைய கட்சி. அனைத்துக் கட்சியிலும் தமிழ்நாட்டின் நலனை விரும்புபவர்கள் இருக்கிறார்கள். தலைவர்களை எல்லாம் தூக்கி எறிந்து விடுங்கள். நீங்கள் தமிழனாக தலைநிமிர்ந்து நில்லுங்கள். அனைத்து மக்களும் தமிழனாக தலை நிமிர்ந்து நின்றால், இந்தப் போர்களில் இந்த இரண்டு சோதனைகளில் நிச்சயமாக தமிழ்நாடு வெல்லும்.

பெரியார் சொன்னது என்ன?

இறுதியாக ஒன்றைச் சொல்கிறேன். இத்தோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். மொழிப் போர் நடந்தது. தந்தை பெரியார் அவர்கள்மீது வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றத்தில், அவர் நீதிபதி முன்பு குற்றவாளியாக நிற்கிறார். வழக்காடவில்லை. என்ன சொன்னார் தெரியுமா... "கோர்ட்டார் அவர்கள் திருப்தி அடையும் வகையில் தங்களால் எவ்வளவு அதிக சிறைத் தண்டனையை கொடுக்க முடியுமோ... அவைகளைத் தாருங்கள். ... உணர்ச்சி திருப்தி அடையும் பகுதியில் சிறையில் எவ்வளவு தாழ்ந்த வகுப்பு கொடுக்க இடம் உண்டோ அதையும் கொடுத்து, இவ்வழக்கு விசாரணை நாடகத்தை முடித்து விடும்படி வணக்கமாய் கேட்டுக் கொள்கிறேன்" என்றார். எவ்வளவு தண்டனை கொடுத்தாலும் நான் ஏற்றுக் கொள்கிறேன். எவ்வளவு கீழான சிறையில் கிளாஸ் ஏ, கிளாஸ் பி என்றெல்லாம் இருக்கிறது, அதை கொடுத்தாலும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், நான் வழக்கை நடத்த விரும்பவில்லை. இந்த நாடகத்தை நிறுத்துங்கள் என்றார்.

தமிழ்நாட்டில் வாழும் 7 கோடியே 69 லட்சம் தமிழர்கள் ஒரு குரலில் நாம் தமிழர்கள் தன் மனம் உள்ளவர்கள் தமிழ் வரலாறு நமக்குத் தெரியும் தமிழ் கலாச்சாரம் நமக்குத் தெரியும் தமிழனுடைய துணிவு, வீரம் நமக்குத் தெரியும். இந்தக் காலத்தில் இதுதான் போர் இதுதான் சோதனை.

இந்தித் திணிப்பு என்ற ஒரு சோதனை வந்திருக்கிறது. தொகுதி சீரமைப்பு என்ற சோதனை வந்திருக்கிறது. இந்த இரண்டு சோதனைகளையும் தனி மனிதர்கள் ஒவ்வொருவரும் தமிழனாக தலை நிமிர்ந்து நின்று இந்த சோதனையில் வெல்லுவோம் என்று இந்த நேரத்தில் உறுதி எடுத்துக்கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் இந்த முயற்சிக்கு தலைமை தாங்குவதை நான் வாழ்த்துகிறேன். அவருக்கு மேலும் ஊக்கம் தரும் வகையில், இந்த பிறந்தநாள் கூட்டம் நடந்திருக்கிறது. அதற்காக அமைச்சர் சேகர்பாபு அவர்களை பாராட்டுகிறேன்.

இவ்வாறு ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் உரையாற்றினார்.

தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு வேலூர் மாநகர தி.மு.க. சார்பில் வேலப்பாடியில் உள்ள முதியோர் இல்லத்தில் இனிப்புடன் கூடிய மதிய உணவும், அங்கு உள்ளவர்களுக்கு போர்வையும் மாநகர கழக செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் பகுதி கழக செயலாளர்கள் வி. ஜி. கே.சுந்தர விஜி, ஜி.பாலமுரளி கிருஷ்ணா, தி.அ.முனவர் பாஷா, மண்டல குழுதலைவர்கள் வீனஸ் ஆர்.நரேந்திரன், கே.யூசுப்கான், வட்டக் கழக செயலாளர்கள் வி எஸ்.முருகன், ஜெய்சங்கர், ஆர் லோகநாதன், டி.பாஸ்கர், சுதாகர், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் என். எஸ் .ரவி, ஆர்.அருண் காலப்பா என்கின்ற மஜீத் ரமேஷ், மாமன்ற உறுப்பினர் அஸ்மிதா ,மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஆர் கருணாநிதி, டி. முத்துக்குமரன், வி.டி கோபிநாத், ஏ.கே கோபிநாத், ஷம்மி குமார், துபாய் சீனிவாசன், என் உமாபதி, கே. ஆர். மனோஜ் மோகன், பாலாஜி, சண்முகம் உள்ளிட்ட கழகம் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்து

தமிழ் இயக்கங்களின் கூட்டமைப்பு கண்டனக் களப் போராட்டம்!

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தலைமையில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, மார்ச் 5-

ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழ் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கண்டனக் களப் போராட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து இக்கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இந்தி மொழி ஆதிக்கத்தை ஒன்றிய அரசு தமிழ் நாட்டில் புகுத்துவதை ஒரு நூறாண்டாகத் திராவிட இயக்கம் எதிர்த்துப் போராட்டக்களம் அமைத்து வருகிறது.

தந்தை பெரியார் வழி பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு களம் கண்டு போராடியுள்ளனர். தி.மு.கழகத்தின் இந்த மொழிப் போராட்டம் விடுதலைப் போராட்டத்தையும் விஞ்சுமாறு தமிழ் மொழி விடுதலை பெற நடந்துள்ளது. நடந்த போராட்டத்தில் எண்ணற்ற தமிழர்கள் ஈகம் செய்துள்ளனர். இருமொழிக் கொள்கை என்பது ஏதோ சந்தர்ப்ப வாய்ப்பால் ஏற்பட்டதல்ல! களப்போரின் உச்சத்தால் கண்ட வெற்றி இருமொழிக் கொள்கை.. இதனை அறியாமல் ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசுவது வேடிக்கையாக உள்ளது.

மொழிப் போராட்டத்தினால் அமைந்த திராவிட இயக்க ஆட்சி இருமொழிக் கொள்கை வழி ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாடு ஆட்சியை நடத்தி வருகிறது. அறிஞர் அண்ணா இருமொழிக் கொள்கையை அறிவித்த போது கூறினார்.

"யான் என்னால் ஆனதைச் செய்து விட்டேன்

தன்னால் ஆனதைச் செய்யட்டும்" - மத்திய அரசு என்றார்

இப்போதுள்ள ஒன்றிய அரசு, தமிழ்நாட்டின் உன்னத முதல்வராகி, அனைத்துத் துறையும் ஏற்றம் பெற, வியக்கத்தக்க ஆட்சி நடத்தி வரும் நம் முதல்வர் மு.க. ஸ்டாலின் பொறுமையைச் சோதிக்குமாறு, இடர்பல செய்து வருகிறது.

இத்தனை ஆண்டுகளுக்குப் பின் இப்போது 'தேசியக் கல்விக் கொள்கை' என்ற ஒன்றைக் கற்பித்து ஒன்றிய அரசு நம்மீது மும்மொழிக் கொள்கையைப் புகுத்தி இந்தி மொழியை தமிழ்நாடு ஏற்றுக் கொள்ள அடாவடித்தனம் செய்கிறது. 2152 கோடி ரூபாய் தமிழ் நாட்டுக் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தரும் உதவியை வழங்காமல் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வம்பு வழக்குப் பேசுகிறார்.

நம் ஆற்றல் மிக்க முதல்வர் எத்தனை ஆயிரம் கோடி கொடுத்தாலும் இந்தி ஆதிக்கத்தை ஏற்க மாட்டோம் என அறைகூவல் விடுக்கிறார். முதல்வர் அவர்களின் உரமிக்க இந்தி ஆதிக்க எதிர்ப்புக்குத் தமிழ் மக்கள் அனைவரும் திரண்டெழுந்து ஆதரவு தருவோம்.

தேசியக் கல்விக் கொள்கைப் பேரால் வரும் தமிழ் நாட்டில் இந்தி திணிப்பை முறியடிக்கத் தமிழ் நாட்டிலுள்ள அனைத்துத் தமிழ் அமைப்புகளும், எழுத்தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்கள் அனைவரும் திரண்டெழ வேண்டும். நம்மாண்புமிகு முதல்வரின், இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு ஆதரவு தந்திட வேண்டுகிறோம்.

'இருமொழிக் கொள்கையே தமிழகத்திற்கு எப்போதும் வேண்டும். மும்மொழிக் கொள்கை எப்போதும் வேண்டாம்' என ஒன்றிய அரசிற்கு அறிவுறுத்தி நம்முதல்வர் மக்களாட்சி வெற்றிவாகை சூடிட முழக்கமிடுவோம். கண்டனம் தெரிவிப்போம்!

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தைத் திராவிட இயக்கத் தமிழ்ப் பேரவைத் தலைவர் சுப. வீர பாண்டியன் தொடங்கி வைக்கிறார். பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ தலைமை தாங்குகிறார்.

பேராசிரியர் மா. செல்வராசு, தமிழ்த்திரு வி.பி. கலைராசன், காரை. தமிழ்த்திரு. செல்வராசு, கவிஞர் எ.த. இளங்கோ ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கவிச்சிங்கம் கண்மதியன், வழக்கறிஞர் சீ.சா. சிவக்குமார், முனைவர் கருப்பசாமி, பேராசிரியர் யோ.சா. இராசேந்திரன், கவிஞர் ஏர்வாடி இராதாகிருட்டிணன், புலவர் தமிழாளன், பாவலர் ம. கணபதி, பேராசிரியர் தமிழியலன், புலவர் உதயை வீரையன், புலவர் கா. முருகையன், முசுபுர்இரகுமான், பேராசிரியர் ஏழுமலை, த.கு. திவாகரன், புலவர் இராமலிங்கம், வை.மா. குமார், முகம் இளமாறன், க.ச. கலைஅரசன், மதிஅரசு, உமா சுப்பிரமணியன், தன. தமிழரசன், சிந்தை வாசன், வே. தளபதி, திருவள்ளுவன், இலக்குவனார், குடியாத்தம் குமணன், துரை வசந்தராசன், பூவை கோ. சுந்தரம், வானரசன், இரவி தாசன், தில்லை பாட்கர், மணிவண்ணன், செங்கை தாமசு, தண்ணீர்க்குளம்தாசன், வேணுகோபால், லெனின் காவிரிச்செல்வன், த. இராசரத்தினம், ந. பாபு, வியாசை இர. முரளி, தளவை இராசேந்திரன், சோலைதமிழினியன், கவிச்சுரபி சந்திரசேகரன், தாமரைப் பூவண்ணன், நம்ம ஊர் கோபிநாத், கனக பாரதி, வி. நாகசுந்தரம், வழக்கறிஞர் பாபு, கவிஞர் காளிதாசு, கவிஞர் கண்ணதாசன், செங்கதிர் சண்முகம், பட்டுராசபாரதி, குமரிச்செழியன், திருவை பாபு, சொர்ணபாரதி, சின்னப்பாத் தமிழர், கருஞ்சட்டை இராசேந்திரன் மற்றும் நூற்றுக்கு மேலான தமிழ்கூட்டமைப்பினர் போராட்ட ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கிறார்கள்.

கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம்: வள்ளுவர் கோட்டம் கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை. நாள் : 10.03.2025 திங்கட்கிழமை, காலை 10 மணி முதல் 1 மணி வரை

அனைவரும் வருகை தந்து ஆதரவு தருமாறு ஒருங்கிணைப்பாளர்கள் :

தமிழ்மாமணி வா.மு.சே. திருவள்ளுவர், மதுரகவி மறத்தமிழன்., இசைப்பாலவர் நா. நந்தன் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கவிஞர் மு. வீரமுத்து நன்றி கூறுகிறார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அன்பில் தர்மலிங்கம்

மார்ச் 5 (1993)

நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய இயக்கங்களில் பங்கு கொண்டதன்றி தி.மு.க. உருவானபோது கழகத்தில் முக்கிய பங்கேற்று பணியாற்றினார்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

திருச்சி மாவட்டச் செயலாளராக 1950 முதல் 1972 வரை பணியாற்றினார்.

திருச்சி மாவட்டத்தில் 1956ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. 2வது மாநில மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக பணியாற்றியவர்.

மாநாட்டிற்கு கழகத்தவரை அண்ணா வருமாறு அழைப்பு விடுக்கும்போது அதற்காக திராவிட நாடு இதழில் எழுதிய தம்பிக்கு மடலில் "அன்பில் அழைக்கிறார்" என்றே தலைப்பிட்டு எழுதினார்.

சட்டமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த் துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.

தலைமைக் கழகச் சார்பில் தலைவர் கலைஞர் அவர்கள் 1986ஆம் ஆண்டு "பெரியார் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.